2. வினுக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினுக்கள்.

புதுக்கோட்டைக்குத் தனி மின் பிரிவு.

*வினு எண் 151—திரு. நா. சுந்தரராஜ்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

புதுக்கோட்டை மாவட்டத்திற்கு தனியாக மின்சார சிஸ்டம் (Pudukkottai Electricity System) அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: 1—6—78 மூதல் புதுக்கோட்டை மாவட்டத்திற்கென்று தனியாக மின்சார சிஸ்டம் அமைக்கப்பட்டுள்ளது.

திரு. நா. சுந்தரராஜ்: தலைவரவர்களே, புதிதாக அங்கே ஒரு சிஸ்டத்தை ஆரம்பித்திருப்பதற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ஆனல் இந்த சிஸ்டத்திற்கு அதிகமாகப் பணியாளர்கள்—குறிப்பாக கணக்காயர்கள் தேவைப்படுவதால் திருச்சி சிஸ்டத்திலிருந்து மாற்றம் செய்யப்படுகிருர்கள். அப்படி மாற்றம் செய்யும்போது ஒரே இடத்தில் வேலை செய்து வருகின்ற கணவன், மனைவி இருவரையும் பிரிக்கின்ற முறையிலே விருப்பத்திற்கு மாருக மாற்றம் செய்கிருர்கள் என்று புகார் சொல்கிருர்கள். ஆகவே, இந்தத் தவருன நடைமுறையை கைவிட்டுவிட்டு, யார், யார் மாற்றம் செய்ய விரும்புகிருர்களோ அவர்களை மட்டும் மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே, அத்தகைய தகவல் அரசுக்கு இல்லை.

திருநெல்வேலி—தூத்துக்குடி மின் பிரிவு.

*வினு எண் 152—திரு. ரா. கிருஷ்ணன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி-தூத்துக்குடி மின்சார விநியோக கம்பெனியை தமிழ்நாடு மின்சார வாரியம் கையகப் (acquisition) படுத்தி ஆண்டுகள் பல ஆகியும் மின் வாரிய தொழிலாளர்களுக்கும், கம்பெனி தொழிலாளர்களுக்கும் வேலைப்பளு சலுகைகளில் வித்தியாசம் இருக்கிறதா?

(ஆ) ஆம் எனில் அதை நீக்க அரசின் நடவடிக்கை என்ன?

1978 செப்டம்பர் 12]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : (அ) ஆம்.

(ஆ) இப் பிரச்னே தமிழ்நாடு மின் வாரியத்தின் அதிகாரத்திற்குட்பட்டது. சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களோடு வாரியம் செய்துகொண்ட முடிவின்படி அந் நிறுவனத்திலுள்ள ஊழியர்கள் அனைவரையும் வாரியம் எடுத்துக்கொண்டுள்ளது. இருப்பினும் வேலைப்பளுவில் வித்தியாசம் இருந்து வருகிறது. இதை நீக்கும் பொருட்டு சம்பந்தப்பட்ட மேற்பார்வை பொறியாளரோடு மின்சார வாரியம் கலந்து ஆராய்ந்து வருகிறது. விரைவில் இக் காரியத்தில் வாரியம் முடிவெடுக்கும்.

திரு. ரா. கிருஷ்ணன் : தலைவரவர்களே, இந்த டி.டி.எஸ். கம்பெனியை (திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார விநியோக கம்பெனி) அண்டர்டேக்கிங் செய்து கிட்டத்தட்ட 5 ஆண்டுகள் ஆகின்றன. இதற்குள் ஒர்க்கர்ஸ் யூனியனுடன் பிரச்சினைகளைப் பேசி முடிவு செய்திருக்கலாம். இப்போது இருக்கிற பிரச்சினை என்னவென்ருல் வேலைப் பளு அதிகமாக இருப்பதால் அவர்களுக்கு பல சங்கடங்கள் ஏற்பட்டு, வேலை நிறுத்தம் கூட ஏற்படும் அபாயம் இருக்கிறது. இது சம்பந்தமாக தொடர் உண்ணுவிரத இயக்கம் கூட நடத்தியதாகத் தெரிகிறது. இதைக் கண்டிக்கும் வகையில் அங்கே இருக்கிற டிவிஷனல் என்சினியர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்துக்கொண்டிருக்கிருர். ஏற்கெனவே அவர் மீது எமர்ஜன்ஸி எக்ஸஸ் புகார் கொடுக்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது. அப்படிப்பட்டவரை மாற்றம் செய்யாமல் இருப்பதும் அரசுக்குத் தெரியுமா? தெரிந்திருந்தால் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இத் திட்டம் திருநெல்வேலி—தூத்துக்குடி மின்சார நிறுவனத்தாரிடம் இருந்து கையகப்படுத்தப்பட்டு நான்காண்டுகளுக்கு மேல் ஆகின்றன. மின்சார வாரிய ஊழியர்களுக்குத் தரப்படுகின்ற இலவச மின்சாரம், சைக்கிள் அலவன்ஸ், உணவுப்படி போன்றவைகள் இந்தக் கையகப்படுத்தப்பட்ட தனியார்க் கம்பெனி பணியாளர்களுக்கும் தரப்படுகின்றன. மற்ற வேலை நிலைமைகள் குறித்து அவற்றுடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. கூடிய விரைவில் ஒரு முடிவு எடுத்து அந்தக் குறைபாடுகளை களைந்தெரிய அரசு முயற்சிக்கும்.

திரு. ந. தனசேகரன் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் கூடிய விரைவில் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்று அறிவித்தார்கள். கூடிய விரைவில் என்று சொல்லப்படும்போது குறிப்பாக எவ்வளவு காலகட்டத்தில் முடியும் என்பதை அறிவிப்பார்களா? ஏனென்ருல் காலதாமதத்தால் அங்கே உள்ள பணியாளர்கள் மாற்ருந்தாய் பராமரிப்பிலே இருப்பது போன்ற

நிலைமை இருக்கின்றது. அந்த நிலையினைப் போக்குகின்ற வகையில் எவ்வளவு காலத்தில் அவர்களுக்கு நிவாரணம் கிடைக்கும் என்பதை அறிவிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, ஐந்தாண்டுகளாக இருக்கின்ற ஒரு பிரச்சினையாகும் இது. ஆகையினால் இன்னும் கொஞ்சம் நாட்கள் பொறுத்து இருப்பது ஒன்றும் கடினமான காரியம் அல்ல. ஆக்கப் பொறுத்தது ஆறப் பொறுக்கலாம். இதிலே மாற்றாந்தாய் என்கின்ற நிலைமை கிடையாது. இப்போது இருப்பது ஒரே தாய்தான். அதனால்தான் பிரச்சினையே வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, இன்னும் தமிழ் நாட்டில் தனியார் வசம் உள்ள மின்சார வினியோகக் கம்பெனிகள் எத்தனை இருக்கின்றன? அவற்றினையும் கையகப்படுத்துவதற்கு அரசினிடம் திட்டம் ஏதேனும் பரிசீலனையில் இருக்கிறதா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, அனைத்துத் தனியார் நிறுவனங்களும் கையகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே இனி வேறு எதுவும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மு. அம்பிகாபதி : பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலி, தூத்துக்குடி மின்சாரத் திட்டத்தை தமிழ்நாடு மின்சார வாரியம் கையகப்படுத்திய போது எடுத்துக் கொண்ட ஊழியர்கள் எத்தனை பேர்? கிட்டத்தட்ட நான்காண்டுகள் ஆகியும் இன்னும் அவர்களுக்கு தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருப்பதைப்போல் பணி நடை முறைகள் செய்யப்படாமல் இருப்பதன் காரணம் என்ன? அதிலே அமைச்சரவர்கள் தலையிட்டு பிரச்சினையைத் தீர்த்து வைப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, இதிலே, பணியாற்றுகின்ற, ஊழியர்கள் 353 பேர். அவர்களுடைய பணி நிலைமைகள், மின்சார வாரியத்திலே பணியாற்றுகின்ற பணி நிலைமைகள் ஆகிய இரண்டும் வேறுபட்டிருக்கின்றன. ஆகவே இதிலே எது ஆதாயம் தரத்தக்கது என்பதைப் பார்த்து அது குறித்து நன்கு பேசி முடிவினை எடுக்க வேண்டிய நிலைமை இருக்கின்றது. ஆகவே இதிலே அமைச்சரவர்கள் தலையிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற கேள்வியே போதுமானதாகும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1978 செப்டம்பர் 12]

திரு. எம். எம். ஏ. ரசாக் : தலைவரவர்களே, அனைத்துப் பிரிவுகளும் அரசால் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிட்டன என்று அமைச்சரவர்கள் கூறினார்கள். செங்கோட்டையைப் பொறுத்தவரையில் முன்னாள் தனியார் கம்பெனியிடத்திலே இருக்கின்றபோது அமைக்கப்பட்ட மின்சாரக் கம்பங்களே இன்னும் இருந்து வருகின்றன. அவற்றினை மாற்றியமைத்து அங்கே சிமெண்ட் கம்பங்களையும், இரும்புக் கம்பங்களையும் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்து பரிசீலிக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : தலைவரவர்களே, இந்த நிறுவனத்தை வாரியம் எடுத்து நான்காண்டுகள் ஆகிவிட்டன என்று அமைச்சர் அவர்களே ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். கொஞ்சம் பொறுத்திருக்க வேண்டும் என்ற முறையில் அமைச்சரவர்கள் சொன்னார்கள். இது அரசு நிறுவனம். அதற்கு ஒரு அமைச்சரும் இருக்கிறார்கள். அமைச்சரவர்கள் தீர்த்து வைக்க வேண்டிய சூழ்நிலைக்கு இது ஆகிவிட்டது. நான்காண்டுகளாக இந்தப் பிரச்சினையை பற்றி தொழிற்சங்கங்களுடன் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நானும் மின்வாரியத்திலுள்ள ஒரு தொழிற்சங்கத்தின் தலைவன் என்ற முறையில் கேட்க விரும்புகிறேன். அமைச்சரவர்கள் ஆக்கப் பொறுத்தது ஆறப்பொறுக்கக் கூடாதா என்று கேட்டார்கள். ஆக்கி நீண்ட காலம் ஆகிவிட்டது. ஆறட்டும் ஆறட்டும் என்றுபொறுத்துக் கொண்டே இருந்துவிட்டோமானால் பிறகு சாப்பிடுவதற்குப் பயன்படாதநிலை ஏற்பட்டு விடக்கூடாது. ஆகவே இந்த அளவுக்கு வந்துவிட்ட பிறகு விரைவில் இதனை முடிப்பதற்கு அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, முடிவு காண்பதில் பலவகை உண்டு. ஆனால் தொழிலாளர்களும் ஏற்றுக் கொள்ளத்தக்க வகையிலும் அதே நேரத்தில் நிர்வாகத்தினுடைய பணி நிலைமைகளிலேயும் வேறு எந்தச் சிக்கல்களும் எழாத வகையிலும் முடிவினை மேற்கொள்வதுதான் பொருத்தம் என்பதை தொழிற்சங்கத்திலே தலைவராக இருந்து நீண்ட அனுபவம் பெற்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராசன் அவர்கள் அறிவார்கள். ஆகவே அதிலேதான் சிக்கல்கள் இருக்கின்றன. இருந்தாலும் இந்தப் பிரச்சினையை விரைவில் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1978 செப்டம்பர் 12

[முற்பகல் 9–10]

திரு. ரா. கிருஷ்ணன் : இந்தப் பிரச்சினையைத் தீர்க்கிற விதத்தில் ஆதாயம் இருக்கக்கூடிய நிலையில் கவனிக்கப்படும் என்று கூறப்படுகிறது. ஆனால் அதை மட்டும் கணக்கில் எடுத்துக் கொள்வதால் பல்வேறு சிக்கல்கள் உருவாகும் என்பதைத் தெரிவிக்க விரும்புகிறேன். காரணம் என்னவெனில், இந்தக் கம்பெனியைப் பொறுத்தவரையில் மிக அதிகமான வேலைப் பளு இருக்கிறது என்பதையும் அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும் என்பதோடு, அந்த வேலைப் பளுவைக் கட்டாயமாக வாங்குகிற போக்கு அந்த டி.இ. யிடம் இருப்பதையும் அதனால் பல்வேறு சிக்கல்கள் உருவாவதையும் கவனித்து இதற்கு உடனடியாகத் தீர்வு காண ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பிரச்சினை பேசித் தீர்க்கப்பட வேண்டிய ஒன்று.

விக்கிரமசிங்கபுரம் கூட்டுறவு நாணய சங்கம்.

* வினா எண். 153—திரு. மெ. ஆண்டி அம்பலம் : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்ற பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கத்தில் பணம் கையாடல் நடைபெற்றுள்ளது என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : (அ) திருநெல்வேலி மாவட்டம் விக்கிரமசிங்கபுரம் பேரூராட்சி மன்றப் பகுதியில் உள்ள கூட்டுறவு நாணய சங்கங்களில் கையாடல் ஏதும் நடைபெறவில்லை.

(ஆ) கையாடல் ஏதும் இல்லாததால் நடவடிக்கை ஏதும் இல்லை.

திரு. மெ. ஆண்டி அம்பலம் : இந்தச் செய்தி பத்திரிகையில் வெளிவந்துள்ளது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, எந்தப் பத்திரிகை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னால் அது பரிசீலிக்கப்படும்.